**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**01 ஏப்ரல் 2016 / 23 ஜமாதியுல் ஆகிர் 1437**

# <u>கல்வி விஷயத்தில் பணிவைக் கடைப்பிடித்தல்</u>

**اَلْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُه المَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُوْن.**

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

இப்போதே, நமது பணிவைத் தெரிவித்துக் கொள்ளும் வகையில் நம்மைத் தாழ்த்திக் கொண்டு, "தக்வா" எனும் இறை பக்தியின் உண்மையான உணர்வை வழங்குமாறு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம் வேண்டிக் கொள்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றும் ஆற்றலை வழங்குமாறும், அவன் தடைசெய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான ஆற்றலையும்

வழங்குமாறும் அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! அல்லாஹ் நமது பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

ஜமாஅத்தார்களே!

திருக்குர்ஆனின் "அல்-கஹ்ஃபி" எனும் அத்தியாயத்தில் காணப்படும் இறைத்தூதர் மூஸா (அலை) மற்றும் இறைத்தூதர் கிள்ர் (அலை) ஆகியோரின் வரலாற்றைச் சிந்தித்துப் பார்க்குமாறு, இன்று, உங்களுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன். மூஸா (அலை) அவர்கள், கிள்ர் (அலை) அவர்களிடமிருந்து எவ்வாறு கல்வி கற்க விரும்பினார்கள் என்பது தான் அந்த வரலாறு ஆகும். கிள்ர் (அலை) அவர்களிடத்தில் கல்வி கற்குமாறு மூஸா (அலை) அவர்கள் ஏன் கட்டளையிடப்பட்டார்கள் என்பதை நாம் அறிவோமா?

உபை பின் கஃபு (ரலி) ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றதாக அறிவிக்கின்றார்கள்:

இறைத்தூதர் மூஸா (அலை) அவர்கள் இஸ்ரவேலர்களுடன் இருந்த போது ஒரு மனிதர் வந்து: இறைத்தூதர் அவர்களே! உங்களை விட அதிகம் அறிந்தவர், பயபக்திமிக்கவர் இப்பூமியில் வேறு யாராவது உண்டா? எனக் கேட்டார். "இல்லை" என இறைத்தூதர் மூஸா (அலை) பதிலளித்தார்கள். அப்போது தான், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா : எமது அடியார் "கிள்ர்" உம்மை விட அதிகம் அறிந்தவர் ஆவார் என மூஸா (அலை) அவர்களுக்குத் தெரிவித்தான். அப்போது, இறைத்தூதர் மூஸா(அலை) அவர்கள் இறைத்தூதர் கிள்ர் (அலை) அவர்களிடமிருந்து கல்வி கற்க வேண்டுமெனத் தீர்மானித்தார்கள். இக்கருத்தை திருக்குர்ஆனின் "அல்-

கஹ்ஃபி” எனும் அத்தியாயத்தின் 65-69 வரையிலான வசனங்களில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா பின்வருமாறு கூறுகின்றான்:

فَوَجَدَا عَبْدًا مِّنْ عِبَادِنَآ ءَاتَيْنَٰهُ رَحْمَةً مِّنْ عِندِنَا وَعَلَّمْنَٰهُ مِن لَّدُنَّا عِلْمًا ﴿٦٥﴾
قَالَ لَهُۥ مُوسَىٰ هَلْ أَتَّبِعُكَ عَلَىٰٓ أَن تُعَلِّمَنِ مِمَّا عُلِّمْتَ رُشْدًا ﴿٦٦﴾
قَالَ إِنَّكَ لَن تَسْتَطِيعَ مَعِىَ صَبْرًا ﴿٦٧﴾ وَكَيْفَ تَصْبِرُ عَلَىٰ مَا لَمْ تُحِطْ بِهِۦ خُبْرًا ﴿٦٨﴾
قَالَ سَتَجِدُنِىٓ إِن شَآءَ ٱللَّهُ صَابِرًا وَلَآ أَعْصِى لَكَ أَمْرًا ﴿٦٩﴾

பொருள்: (இவ்வாறு) அவ்விருவரும் நம் அடியார்களில் ஒருவரைக் கண்டார்கள்; நாம் அவருக்கு நம்மிடமிருந்து கிருபை அருளியிருந்தோம்; இன்னும் நாம் அவருக்கு நம்மிடமிருந்து கல்வி ஞானத்தையும் கற்றுக் கொடுத்திருந்தோம். “உங்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்ட நன்மையானவற்றை நீங்கள் எனக்குக் கற்பிக்கும் பொருட்டு, உங்களை நான் பின் தொடரட்டுமா? என்று அவரிடம் மூஸா கேட்டார். (அதற்கவர்,) “நிச்சயமாக நீர் என்னுடன் பொறுமையாக இருக்க இயலமாட்டீர்!” என்று கூறினார். “(ஏனெனில்) எதைப் பற்றி உமக்கு முழுமையான ஞானம் இல்லையோ, அதில் நீர் எவ்வாறு பொறுமையாயிருப்பீர்!” (என்று கேட்டார்.) (அதற்கு) மூஸா, “இன்ஷா அல்லாஹ்! நான் பொறுமையுள்ளவனாகவும், எவ்விஷயத்திலும் உமக்கு மாறு செய்யாதவனாகவும் இருப்பதை நீங்கள் காண்பீர்கள்” என்று (மூஸா) சொன்னார்.

சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் மிகவும் மேன்மையானவன்). இவ்வாறுதான், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா தனது தூதர்களின் நடத்தைகளை,

அவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதை மிகச் சிறப்பாக வடிவமைத்தான்.

மேற்கண்ட வரலாறு, நாம் எவ்வளவு தான் கல்வியறிவுமிக்கவர்களாக இருப்பினும், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம்மை விட அதிகக் கல்வியறிவுமிக்கவனாக, அறிந்தவனாக இருக்கின்றான்; அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன்; மனித அறிவு எல்லைக்குட்பட்டது தான் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "யூசுப்" எனும் அத்தியாயத்தின் 76-வது வசனத்தில் கூறுகின்றான்:

"நாம் நாடியவர்களின் பதவிகளை நாம் உயர்த்துகின்றோம்; கல்வி அறிவுடைய ஒவ்வொருவருக்கும் மேலான அறிந்த ஒருவன் இருக்கவே செய்கிறான்!"

ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாதான் வானம், பூமியிலுள்ள அனைத்துக்கும் அதிபதியாக உள்ளான். நமது உள்ளங்களிலும் மனங்களிலும் காணப்படும் கல்வியறிவுகளுக்கும் அவனே உரிமையாளன் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. உண்மையில், பல சோதனைகளையும் சவால்களையும் எதிர்கொண்டு வெற்றிபெற்ற, அல்லாஹ்வின் பாதையின் பால் பலருக்கு அழைப்பு விடுத்த, அல்லாஹ்வின் விரோதியாக இருந்த ஃபிர்அவ்னிடமிருந்து தனது மக்களைக் காப்பாற்றிய இறைத்தூதர் மூஸா (அலை) அவர்களின் உள்ளத்தில் ஒரு துளியளவு கர்வம் கூட இருப்பதை அல்லாஹ்

சுப்ஹானஹு வதஆலா விரும்பவில்லை. இவ்வளவு சாதனைகளை அவர்கள் நிகழ்த்தியிருந்த போதிலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட கல்வியறிவு மற்றும் திறமைகளைக் கொண்டு அவர்கள் கர்வம் கொள்ளக்கூடாது என அல்லாஹ் நினைவூட்டுகிறான். அல்லாஹ்வின் தூதராகிய மூஸா (அலை) அவர்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாம் எவ்விதத் தகுதியுமில்லாதவர்கள் என்றே கூற வேண்டும். பலஹீனம், பாவங்கள் மற்றும் தவறுகளால் நாம் நிரப்பமானவர்களாக உள்ளோம். அல்லாஹ்வின் கல்வியறிவை நமது கல்வியறிவுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது ஒரு புறமிருக்கட்டும்; இறைத்தூதர்களின் கல்வியறிவுகளுடன் நமது கல்வியறிவை ஒப்பிட்டுப் பார்த்தால் கூட நமது கல்வியறிவு ஒன்றுமில்லை என்று தான் கூற முடியும். இந்நிலையில், நமக்கு வழங்கப்பட்டுள்ள கல்வியறிவைக் கொண்டு நாம் கர்வம் கொள்வது எவ்வாறு நியாயமாகும்?

நிச்சயம், அவ்வாறு கர்வம் கொள்ளும் தகுதி நமக்கில்லை. எனவே, பணிவாக நடப்பதை நாம் கற்றுக் கொள்வோமாக! நாம் தான் அனைத்தையும் அறிந்துள்ளோம்; நமது கருத்துக்கள் தான் சரியானவை எனக் கருத வேண்டாம்.

ஜமாஅத்தார்களே!

மேலும், இறைத்தூதர் மூஸா (அலை) அவர்கள், தன்னை விட அதிகம் அறிந்த மற்றொரு அல்லாஹ்வின் அடியார் இருக்கின்றார் என்பதை அறிந்ததும் அவர்களின் செயல்பாடு எப்படி இருந்தது என்பதை இங்கு நாம் கவனிக்க வேண்டும். தன்னை விட மற்றோரு நபருக்கு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா அதிகக் கல்வியறிவைக் கொடுத்துள்ளான் என நினைத்து கோபப்பட்டார்களா? நிச்சயம் இல்லை. அந்த மற்றொரு நபரின்

கல்வியறிவு எப்படிப்பட்டது? எனக் கேள்வி கேட்கவில்லை. அவரது கல்வியறிவை மறுக்கவில்லை. அவரது கல்வியறிவை நிரூபிப்பதற்காக வாக்குவாதத்தில் ஈடுபடவில்லை.

உண்மையில், அவர்கள் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம்: "யா அல்லாஹ்! அந்த உனது அடியாரை நான் எப்படி சந்திக்க முடியும்; அவரிடம் நான் கல்வி கற்க விரும்புகிறேன்" என்று கூறினார்கள். துளியளவு கோபமோ அல்லது கர்வமோ இல்லாமல் உச்சகட்டமான ஆர்வம் மற்றும் பணிவுடன், மனப்பூர்வமாக அவரிடமிருந்து கல்வியையும் அனுபவத்தையும் கற்க விரும்பினார்கள்.

மாஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடியவை நடக்கின்றன). அவர்களின் நடத்தை எவ்வளவு சிறப்பாக இருந்துள்ளது! என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். அவர்கள் அல்லாஹ்வின் தூதராக இருந்த போதிலும் தனது கல்வியே தனக்குப் போதுமாகும் எனக் கருதவில்லை. அவர்கள் அறியாதவற்றை அறிந்த மற்றொருவர் இருக்கின்றார் என்பதை அவர்கள் அறிந்த போது அவரிடம் கல்வி கற்கத் தயங்கவில்லை. அவர்களிடம் காணப்பட்ட ஆர்வமானது, அல்லாஹ்வின் வல்லமையையும், அல்லாஹ்வின் அடியார் எனும் ரீதியில் தன்னிடம் காணப்பட்ட பலஹீனத்தையும் அவர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள் என்பதற்குச் சாட்சியாக இருந்தது. இவ்விதமான உண்மையானப் பணிவை நம்மில் நாம் ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

ஒவ்வொரு "முஃமின்" (ஓரிறை நம்பிக்கையாளரும்) கடைப்பிடிக்க வேண்டிய பலவிதமான "தவாதுஃ" (பணிவுகள்) இருக்கின்றன. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் விஷயத்தில் பணிவாக நடந்து கொள்வது, சக அடியார்களின் விஷயத்தில் பணிவாக நடப்பது எனப் பலவாறு உள்ளன. நமது அன்றாட வாழ்வில் நம்மில் நாம் பணிவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நோக்கில் இம்மாதம் முழுவதும் குத்பா பிரசங்கத்தில் இதே தலைப்பில் விவாதிக்கப்படும். இன்ஷாஅல்லாஹ்.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

கல்வியறிவைத் தேடுவதில் இறைத்தூதர் மூஸா (அலை) அவர்களிடம் காணப்பட்ட பணிவான நடத்தையை ஆர்வத்துடன் பின்பற்றுவோமாக! நாம் அதிகம் அறிந்துள்ளோம் எனும் உணர்வு நம்மிடம் ஏற்பட்ட போதிலும், நம்மிடமுள்ள கல்வியறிவைக் கொண்டு நாம் கர்வம் கொள்வது கூடாது. நம்மிடமுள்ள கல்வியறிவு நமக்குப் போதுமாகும்; மற்றவரிடம் கல்வி கற்க வேண்டிய அவசியமில்லை எனும் குறுகிய மனப்பான்மையை நாம் தவிர்க்க வேண்டும். தன்னை விட அதிகக் கல்வியறிவும் பக்தியுமிக்க நபர்களிடமிருந்து கல்வி எனும் பொக்கிஷத்தைக் கற்றுக் கொள்வதில் மூஸா (அலை) அவர்களிடம் காணப்பட்ட ஆர்வத்தை நம்மில் நாம் ஏற்படுத்திக் கொள்வோமாக! நமது இந்த முயற்சி, அனைத்தையும் அறிந்த, நம்மையெல்லாம் படைத்த அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவை மறுமையில் நாம் சந்திக்கும் போது நமது நற்காரியங்களில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்படட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجاةَ التَّائِبِيْنَ.